# ஆறுமுக நாவலர் - ஆவணப்படுத்தல்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

ஆறுமுக நாவலர் (டிசம்பர் 18, 1822 - டிசம்பர் 5, 1879) தமிழறிஞர், சைவஅறிஞர், தமிழ் & ஆங்கில ஆசிரியர், மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர், உரையாசிரியர், சொற்பொழிவாளர் என பன்முகம் கொண்டவர்.

சைவப்பிள்ளைகளுக்குப் பாடநூல்கள் அச்சிடுவதற்கு அச்சியந்திரம் வாங்குவதற்காக நல்லூர் சதாசிவம்பிள்ளையுடன் 1849 ஆடி மாதம் சென்னை சென்றார். அங்கு திருவாவடுதுறை ஆதீனத்தில் சைவப்பிரசங்கம் செய்து தமது புலமையை வெளிப்படுத்தி நாவலர் பட்டத்தைப் பெற்றார். சென்னையில் சிலகாலமிருந்து சூடாமணி நிகண்டையும் சௌந்தரியலகரி உரையும் அச்சிற் பதித்தபின் ஓர் அச்சியந்திரத்துடன் யாழ்ப்பாணம் திரும்பினார்.

தமது இல்லத்தில் வித்தியானுபாலனயந்திரசாலை என்னும் பெயரில் ஓர் அச்சுக்கூடம் நிறுவி பாலபாடம், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் உரை, சிவாலயதரிசனவிதி, சைவசமயசாரம், கொலை மறுத்தல், நன்னூல் விருத்தியுரை, திருச்செந்தினிரோட்டக யமகவந்தாதியுரை, திருமுருகாற்றுப்படையுரை போன்ற பல நூல்களை அச்சிட்டார். திருத்தொண்டர் பெரியபுராணத்தை வசன நடையில் எழுதி அச்சிட்டார். ஞானக்கும்மி, யேசுமதபரிகாரம், வச்சிரதண்டம் ஆகிய நூல்களை வெளியிட்டார்.

இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் உருவான சைவ மீட்பியக்கத்தின் முதன்மை ஆளுமைகளில் ஒருவர்.அந்த வகையில் ஆறுமுகநாவலரையும் அவரது பணிகளையும் ஆவணப்படுத்துதல் மிகவும் அவசியமாகும்.

## செயற்றிட்ட நோக்கம்

இச்செயற்றிட்டம் மூலம் ஆறுமுக நாவலர் அவர்கள் ஆற்றிய அச்சுப் பணிகள், தமிழ்ப்பணிகள் இவரால் இயற்றப்பட்ட மற்றும் மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள் , ஆறுமுக நாவலரால் நிறுவப்பட்ட பாடசாலைகள் , அச்சுக்கூடங்கள் என்பவற்றை ஆவணப்படுத்துவதோடு அவருடன் தொடர்புபட்ட நபர்களை இனங்கண்டு அவர்களது வாய்மொழி வரலாற்றினை பதிவு செய்தல் .

## எதிர்பார்க்கப்படும் அடைவுகள்

- ஆறுமுக நாவலர் அவர்களது படைப்புக்களை எண்ணிமப்படுத்தி பாதுகாத்தல்
- ஆறுமுக நாவலர் நிறுவிய அச்சுக்கூடங்கள் பற்றி ஆவணப்படுத்தல்
- ஆறுமுக நாவலரது தமிழ்ப்பணிகளை ஆவணப்படுத்தல்
- மேற்கூறிய செயற்பாடுகளை பூரணப்படுத்துவதன் மூலம் ஆறுமுக நாவலர் சார் அனைத்து விடயங்களும் ஆவணப்படுத்தப்படும்.

## செயற்றிட்ட காலம்

ஒரு வருட காலப்பகுதிக்குள் ஆறுமுகநாவலரது படைப்புக்கள் அவரது ஆக்கங்கள் அவரது சமூகப்பணி குறித்த விடயங்கள் மேலும் அவரது வரலாற்றோடு தொடர்புபட்ட அவரது பணிகளை இன்று வரை எடுத்துச் சென்றுகொண்டிருக்கிற நபர்கள் பற்றிய வாய்மொழி வரலாறுகள் என்பவை ஆவணப்படுத்தப்பட்டு இச்செயற்றிட்டத்தின் நோக்கம் பூரணப்படுத்தப்படும்

## எதிர்பார்க்கப்படும் செலவீனம்

**LKR 4,657,574**

மேலதிக விபரங்களுக்கு
[https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132](https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132)